**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 440/2024**
திரு. ஆரோக்கிய அமிர்தராஜ் (P.W.–1) **10.10.2025.**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் வீட்டில் பனியன் வியாபாரம் செய்து வருகிறேன். வருமான வரி செலுத்தி வருகிறேன் என்றால் சரி. 15 வருடமாக வருமான வரி செலுத்தி வருகிறேன். 2023–2024 ஆம் ஆண்டு என்னுடைய வருமானம் என்னவென்றால் ரூ. 15 முதல் 20 லட்சம் வரும். வருமான வரி எவ்வளவு செலுத்தினேன் என்றால் நான் தனிப்பட்ட முறையில் வருமான வரி செலுத்துவதில்லை. அவ்வாறு வருமானம் எனக்கு வரவில்லை அதனால் தான் வருமான வரி தனிப்பட்ட முறையில் நான் செலுத்தவில்லை என்றால் சரி. அளவாக வருமானம் வந்தது. எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரு மகன் படித்துக்கொண்டிருக்கிறார். என் மனைவி என்ன செய்கிறார் என்றால் என்னுடன் வேலை செய்து வருகிறார். என்னுடைய வருமானம் என்னுடைய குடும்பத்தை பராமரிக்கவும், மகனை படிக்க வைப்பதற்கு சரியாக இருந்ததால் வருமான வரி செலுத்தவில்லை என்றால் சரி. பிரதிவாதிகளை எவ்வளவு வருடமாக தெரியும் என்றால் 10 வருடங்களாக தெரியும். 2017 ஆம் வருடத்தில் இருந்து தெரியும் என்றால் ஆமாம். 2017 ஆம் வருடம் ஆனந்தராஜன் வரவு செலவு விவரங்கள் பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரி. 2017 ஆம் ஆண்டு ஆனந்தராஜ் சொல்லித்தான் பிரதிவாதிகளுக்கு கடன் கொடுத்தேன் என்றால் ஆனந்தராஜ் பணம் கேட்டார். பிரதிவாதிகளுடன் நான் அடிக்கடி அலைபேசியில் பேசும் வழக்கம் இல்லை என்றால் சரி. எப்போதாவது பேசுவேன். ஆனந்தராஜ், பிரதிவாதிகளுடன் அதிக தொடர்பில் உள்ளார் என்றால் அதை அவரிடம் தான் கேட்கவேண்டும். தாவா வழக்குரை மற்றும் முதல்விசாரணையில்

பிரதிவாதிகளின் சொத்துக்களை பொறுத்து வா.சா.ஆ. 6 பற்றிய விவரங்கள் சொல்லவில்லை என்றால் சரி. தாவா தாக்கல் செய்த போது வா.சா.ஆ.6 ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. அந்த ஆவணம் ஆனந்தராஜிடம் இருந்ததால்தான் தாவா தாக்கல் செய்த போது நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு. என்னிடம் இருந்தது. முதல் விசாரணையிலும், தாவா வழக்குரையிலும் வா.சா.ஆ.6 ஆவணம் எப்போது கொடுக்கப்பட்டது என்ற விவரங்கள் இல்லை என்றால் பணம் வாங்கும் போது கொடுத்தார்கள். அந்த விவரங்களை முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரி. வா.சா.ஆ.1 ஆவணம் எங்கு வைத்து யார் முன்னிலையில் எழுதப்பட்டது என்ற விவரங்கள் தாவா வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரி. ஆனந்தராஜ் மில்லில் வைத்து எழுதப்பட்டது. இந்த விவரத்தை சட்ட அறிவிப்பிலும் சொல்லவில்லை என்றால் சரி. எத்தனை மணிக்கு எங்கு வைத்து எழுதப்பட்டது என்று சொல்லவில்லை என்றால் ஆனந்தராஜ் வீட்டில் வைத்து எழுதப்பட்டது. எத்தனை மணிக்கு எழுதப்பட்டது என்றால் 12 மணிக்கு எழுதப்பட்டது. என்னுடைய வீட்டில் வந்து பிரதிவாதிகள் கடன் வாங்கவில்லை என்றால் சரி. பிரதிவாதிகள் வீட்டிற்கு பக்கத்தில் ஆனந்தராஜ் வீடு உள்ளது. வா.சா.ஆ.1 எங்கு வைத்து எழுதப்பட்டது என்பது எனக்கு தெரியாது என்பதால்தான் அதன் விவரங்களை தாவா வழக்குரை, சட்ட அறிவிப்பு மற்றும் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. முதல்விசாரணையில் வா.சா.ஆ.1 என் முன்னிலையில் எழுதப்பட்டதாக சொல்லவில்லை என்றால் தவறு. என் முன்னிலையில் தான் எழுதப்பட்டது. அதை முதல்விசாரணையில் சொல்லவில்லை என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 யார் இருந்தார்கள் என்றால் நான், ஆனந்தராஜ், பிரகாஷ், முதல் பிரதிவாதி ஆகியோர் இருந்தோம். வா.சா.ஆ.1ல் எழுதியதும் சாட்சியும் என்று அமிர்தராஜ் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரி. பிரகாஷும் எழுதியதும் சாட்சியும் என்று கையொப்பம் செய்யவில்லை என்றால் தவறு. பிரகாஷை எனக்கு எத்தனை

வருடமாக தெரியும் என்றால் 15 வருடங்களாக தெரியும். என்னுடைய நண்பர். அமிர்தராஜ் பிரகாஷை அழைத்து வந்தாரா என்றால் ஆனந்தராஜ் அழைத்து வந்தார். வா.சா.ஆ.1 ஆவணத்தை யார் வாங்கி வந்தார்கள் என்றால் ஆனந்தராஜ் வாங்கி வந்தார். நான் வா.சா.ஆ.1 எழுதிய தேதியில் சென்ற போது 1, 2 பிரதிவாதிகள் பெயர் எழுதப்பட்டியிருந்தது என்றால் தவறு. 1, 2 பிரதிவாதிகள் வந்த பிறகு எழுதினார்கள். வா.சா.ஆ.1 ஆவண விவரங்கள் ஆனந்தராஜ் சொல்லி எழுதப்பட்டது என்றால் தவறு பிரகாஷ் எழுதினார். விவரங்களை ஆனந்தராஜ் எழுதியதாக தற்போது சாட்சி கூறுகிறார். வா.சா.ஆ.1 விவரங்கள் அனைத்தும் ஒரே பேனாவால் எழுதப்பட்டது என்றால் சரி. வா.சா.ஆ.1ல் உள்ள கையொப்பம் 1, 2 பிரதிவாதிகளுடையது இல்லை என்றால் தவறு. கையொப்பம் செய்து கடன் பெற்று சென்றார்கள். 1, 2 பிரதிவாதிகள் இந்த வழக்கின் அறிவிப்பு சமயத்தில் இருந்து வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையொப்பத்தை மறுத்தும், அதை ஏற்படுத்தி தரவில்லை என்று சொல்லி வருகிறார்கள் என்றால் தவறு. வா.சா.ஆ.1ல் உள்ள 1,2 பிரதிவாதிகள் கையொப்பம் மோசடியாக ஏற்பட்டுள்ளது என்பதால் தான் வழக்கு தாக்கல் செய்த போது வா.சா.ஆ.6 ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு. வா.சா.ஆ.1ல் உள்ள 1,2 பிரதிவாதிகள் கையொப்பத்தை வா.சா.ஆ.6ல் உள்ள கையொப்பத்துடன் ஒப்பிட்டு பார்க்க கையெழுத்து நிபுணர் பரிட்சைக்கு அனுப்ப எனக்கு சம்மந்தம் என்றால் சரி. ஆனால் அவ்வாறு செய்ய நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரி. கையொப்பம் செய்துதான் கடன் பெற்றார்கள். பிரதிவாதிகள் எதிர்வாதத்தின் படி தாவா விசாரணைக்கு பிறகு என்னையும், வா.சா.ஆ.1 சாட்சிகள் இருவரையும் ஒரே நாளில் குறுக்கு விசாரணை செய்ய கேட்ட போது பிரகாஷை விசாரணை செய்யவில்லை என்று சொல்லியுள்ளீர்கள் என்றால் ஆமாம். ஆனந்தராஜை மட்டும் விசாரித்தால் போதும் என்று சொல்லிவிட்டேன் என்றால் பிரகாஷ் அழைத்தால் சாட்சி சொல்ல வருவார். ஆனந்தராஜ் என் உடன் பிறந்த சகோதரர் என்றால் ஆமாம். ஆனந்தராஜை தவிர வா.சா.ஆ.1ல் வேறு சாட்சிகள் இல்லை

என்றால் பிரகாஷ் உள்ளார். 10.08.2023 ஆம் தேதி வா.சா.ஆ.1 எழுதப்படவில்லை என்றாலும், வழக்கிற்காக பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றாலும் தவறு. அதனால்தான் எங்கு வைத்து எழுதப்பட்டது என்று என்னால் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகளுக்கு என்ன தொழில் என்றால் வீட்டில் வைத்து மிஷின் வைத்து தைத்து வருகிறார்கள். 1ம் பிரதிவாதி என்ன செய்து வருகிறார் என்றால் டைலராக உள்ளார். வா.சா.ஆ. 1ல் குடும்பம், தொழில் என்று சொல்லப்பட்டுள்ளது. என்ன காரணத்திற்காக கடன் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரி. வீட்டை மாற்றி அமைப்பதற்காக கடன் பெற்றார். இந்த விவரத்தை தாவா வழக்குரை, முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் ஆமாம். வா.சா.ஆ.6 ஆவணத்தை ஈடாக பெற்றததால் அதற்கு வில்லங்கம் போட்டு பார்த்தீர்களா என்றால் இல்லை. நம்பிக்கையின் பேரில் கடன் கொடுத்தோம். வா.சா.ஆ. 6 ஆவணம் ஏற்கனவே வடிவேலிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது. அந்த அடமானத்தை மீட்பதற்காக ரூ. 75,000/- 1, 2 பிரதிவாதிகள் 10.08.2023 ஆம் தேதி ஆனந்தராஜ் மூலம் கடன் கேட்டார்கள் என்றால் தவறு. வா.சா.ஆ.1 தேதியில் ரூ. 4 லட்சம் கடன் கேட்டு கொடுத்தேன். ரூ. 75,000/- மட்டும் கடன் பெற்றுக்கொண்டு வா.சா.ஆ.6 ஆவணத்தை ஆனந்தராஜிடம் கொடுத்தார்கள் என்னிடம் கொடுக்கவில்லை என்றால் தவறு. அந்த தொகைக்கு ரூ. 100க்கு ரூ.3 வீதம் 1, 2 பிரதிவாதிகள் என்னிடம் செலுத்தியுள்ளார்கள் என்றால் தவறு. ரூ. 100க்கு ரூ.2 வீதம் ரூ. 4 லட்சம் கடன் பெற்றுக்கொண்டு ஒரு வருடத்திற்குள் திருப்பி தருவதாக சொல்லிவிட்டு தரவில்லை. இந்த விவரம் வா.சா.ஆ.1ல் எழுதவில்லை என்றால் சரி. வாய்வழியாக பேசப்பட்டது. 28.07.2017 ஆம் தேதி ரூ. 75,000/- காலை 9 மணிக்கு கடனாக 1, 2 பிரதிவாதிகள் விஜயா, சசிக்குமார் முன்னிலையில் என்னிடமும், ஆனந்தராஜிடமும் கடன் பெற்று வா.சா.ஆ.6 ஆவணத்தின் அடமான கடனை நீக்கறவு செய்து என்னிடம் கொடுத்தார்கள் என்றால் தவறு. அதற்காக

பிரதிவாதிகள் ரூ. 2250/– வீதம் வட்டி செலுத்தினார்கள் என்றாலும், கொரோனா காலத்தில் மட்டும் செலுத்தவில்லை என்றாலும் தவறு. 2020 ஆம் வருடம் மேலே சொன்னவாறு வட்டி பிரதிவாதிகள் செலுத்தியுள்ளார்கள் என்றால் தவறு. 01.02.2023 ஆம் தேதி ரூ. 75,000/– அசல் கடன் மற்றும் மீதி வட்டி தொகையுடன் 1, 2 பிரதிவாதிகள் வந்து கடனை முடித்து கொள்வதாக சொல்லி என்னிடம் கேட்ட போது வா.சா.ஆ.6 ஆவணம் தொலைந்து போய்விட்டதாக நான் சொன்னேன் என்றால் தவறு. வா.சா.ஆ.6 ஆவணம் கிடைக்கவில்லை என்று காவல்நிலையத்தில் சான்று பெற்று தருவதாக நான் சொன்னேன் என்றால் தவறு. அதன் பிறகு வா.சா.ஆ.6 ஆவணம் கிடைத்துவிட்டதாகவும், அசல் ரூ. 75,000/– மற்றும் மொத்தமாக வட்டி 45 மாதங்களுக்கு ரூ. 1,01,250/– மற்றும் தண்ட தொகை சேர்த்து ரூ. 2 லட்சம் தர வேண்டும் என்று சொன்னேன் என்றால் தவறு. கடனுக்காக 1, 2 பிரதிவாதிகள் வா.சா.ஆ.1 ஆவணத்தை என்னிடமோ, என் சகோதரிடைமோ எழுதி தரவில்லை என்றாலும், வா.சா.ஆ.6 ஆவணத்தை மட்டும் என்னிடம் கொடுத்திருந்தார்கள் என்றாலும் தவறு. 31.10.2023 ஆம் தேதியன்று வட்டியுடன் சேர்த்து 1, 2 பிரதிவாதிகள் ரூ. 1,56,000/– தருவதாக சொன்னார்கள் என்றால் தவறு. சட்ட விரோதமாக லாபம் அடையவேண்டி வா.சா.ஆ.6 ல் உள்ள கையொப்பங்களை பார்த்து நானும், என் சகோதரர், பிரகாஷ் சேர்ந்து வா.சா.ஆ.1 ஆவணத்தை மோசடியாக ஏற்படுத்தியுள்ளோம் என்றால் தவறு. என் முன்னிலையில் வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படவில்லை என்பதால்தான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. 10.08.2023 ஆம் தேதி என்னிடம் ரூ. 4 லட்சம் இருப்பில் இருந்தது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. என் கையிருப்பில் பணம் எப்போதும் இருக்கும். என்னுடைய வியாபாரம் மற்றும் தனிப்பட்ட வரவு செலவிற்கு ஆவணங்கள் உள்ளது என்றால் வியாபாரத்திற்கு உள்ளது. தனிப்பட்ட லேவாதியம் பெரிய அளவில் செய்யவில்லை. 10.08.2023 ஆம் தேதி 1, 2 பிரதிவாதிகளுக்கு ரூ. 4 லட்சம் கொடுக்க வேண்டும் என்று நான்

பதிவேடுகளில் குறிக்கவில்லை என்றால் சரி. வீட்டில் வியாபாரத்திற்காக அந்த தொகை வைத்திருந்தேன். அவ்வாறு தொகை என்னிடம் இல்லை அதனால்தான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அம்மாதிரி ஆவணங்கள் தாக்கல் செய்ய முடியாது என்றால் தவறு. ரூ. 4 லட்சம் கடன் கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதி வாய்ப்பு இல்லை என்றால் தவறு. வா.சா.ஆ.1 கடன் விவரங்களை வருமான வரி கணக்கில் காட்டவில்லை என்றால் சரி. அந்தத்தேதியில் கடன் கொடுக்காததால் வருமான வரி காட்டவில்லை என்றால் தவறு. என்னிடம் வியாபாரத்திற்காக காசோலை வசதி உள்ளது என்றால் சரி. பெரிய தொகைகளை காசோலை மூலமாகத்தான் பரிமாற்றம் செய்தேன் என்றால் தவறு. சிறிய தொகைகளை வியாபாரத்திற்காக அவ்வாறு செய்தேன். உண்மையிலேயே கடன் கொடுத்தியிருந்தால் ரொக்கமாக கொடுத்திருக்க மாட்டேன், வங்கி பரிமாற்றம் மூலம் கொடுத்திருப்பேன் என்றால் தவறு. பிரதிவாதிகளிடம் சட்ட விரோதமாக பணம் பெறவேண்டி வா.சா.ஆ.1 ஆவணத்தை நான், என்னுடைய சகோதரர், பிரகாஷ் ஆகியோர் மோசடியாக தயார் செய்துள்ளோம் என்றால் தவறு. 2017 ஆம் வருடம் பிரதிவாதிகள் என்னிடம் கடனாக பெற்ற ரூ. 75,000/– திரும்பி பெற எனக்கு அருகதை இல்லை. காலவரையறை தோஷத்தால் பாதிப்படைகிறது என்றால் தவறு. தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் தவறு.

ட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.10.10 17:28:40 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.

**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 440/2024**

திரு. ஆனந்தராஜ் (P.W.–2) **10.10.2025.**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் என்ன வேலை பார்த்து வருகிறேன் என்றால் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன். வா.சா.ஆ.1ல் எழுதியதும், சாட்சியுமாக நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரி. கையொப்பம் செய்துள்ளேன். வா.சா.ஆ.1ல் எழுதியது, சாட்சியும் என்று இல்லை என்றால் சரி. சாட்சியாக நான் கையொப்பம் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணம் எங்கு வைத்து, எத்தனை மணிக்கு எழுதப்பட்டது என்று முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரி. நேரம் ஞாபகமில்லை. வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டு என்னுடைய வீட்டில் வைத்து எழுதவில்லை என்றால் தவறு. என் வீட்டில் வைத்து எழுதப்பட்டது. வாதி என்னுடைய சகோதரர் என்றால் ஆமாம். முதல் விசாரணை வாக்குமூலத்தில் வாதி வீட்டில் வைத்துத்தான் கடன் பெற்று வா.சா.ஆ.1 ஆவணம் எழுதிக் கொடுத்தாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. ஆனால் என் வீட்டில் எழுதப்பட்டது. பிரகாஷை எனக்கும், என் சகோதரருக்கும் எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் ரொம்ப நாட்களாக தெரியும். வா.சா.ஆ.1ல் பிரதிவாதிகள் தரப்பில் யாரும் சாட்சிகள் கையொப்பம் செய்யவில்லை என்றால் ஆமாம். 10.08.2023 ஆம் தேதி என்னுடைய சகோதரர் வாதி வீட்டிற்கு யாரும் செல்லவில்லை என்றால் சரி. வா.சா.ஆ.1 ஆவணம் யார் வாங்கி வந்தார்கள் என்றால் நான் தான் வாங்கினேன். என்னுடைய முதல்விசாரணையில் வா.சா.ஆ.1 தேதியில் யாரெல்லாம் என்ன நேரத்திற்கு வந்தார்கள் என்ற விவரம் சொல்லவில்லை என்றால் சரி.

முதல் விசாரணையில் வா.சா.ஆ.1 சங்கதிகளை யார் சொன்னார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரி. நானே அதை எழுதினேன். வாதி, சாட்சி பிரகாஷ் நான் வைத்திருந்த பேனாவில் கையொப்பம் செய்தார்கள் என்றால் சரி. 10.08.2023 ஆம் தேதியில் வா.சா.ஆ.1 ஆவணம் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. என்வீட்டில் வைத்து எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு எழுதப்பட்டியிருந்தால் அதன் விவரங்களை முதல் விசாரணையில் சொல்லியிருப்பேன் என்றால் தவறு. வா.சா.ஆ.1ல் உள்ள கையொப்பம் 1, 2 பிரதிவாதிகளுடையது இல்லை, நானும் வாதியும் சேர்ந்து மோசடியாக அதை தயார் செய்துள்ளோம் என்றால் தவறு. நானும், பிரதிவாதிகளும் நன்கு பழக்கம், வாதிக்கு பழக்கம் இல்லை, போனில் பேசிக்கொள்வோம் என்றால் சரியல்ல. எனக்கு பிரதிவாதிகள் பக்கத்து வீட்டில் வசித்து வருகிறார்கள். கடன் விவரங்கள் 1, 2 பிரதிவாதிகளிடம் போன் மூலம் நானோ, வாதியோ திருப்பி கேட்டதில்லை என்றால் ஆமாம். பிரதிவாதிகள் அவர்களுடைய அடமான கடனை நேர் செய்வதற்காக 28.07.2017 ஆம் தேதி ரூ. 75,000/– என் மூலம் கடனாக பெற்றார்கள் என்றால் தவறு. அதற்காகத்தான் வா.சா.ஆ.6 ஆவணம் கொடுத்தார்கள் என்றால் தவறு. வா.சா.ஆ.1 தேதியில்தான் கடன் கொடுக்கப்பட்டது. வா.சா.ஆ.1 தேதியில் ரூ. 4 லட்சம் கடனை என் முன்னிலையிலும், சாட்சிகள் முன்னிலையில் பிரதிவாதிகள், வாதியிடமிருந்து பெறவில்லை என்றால் தவறு. என் முன்னிலையில் கடன் கொடுக்கப்பட்டது. 28.07.2017 ஆம் தேதி வா.சா.ஆ.6 ஆவணம் மட்டும் வாதியிடம், பிரதிவாதிகள் கொடுத்தார்கள் என்றாலும் வேறு எந்த ஆவணமும் ஏற்படுத்தி தரவில்லை என்றால் தவறு. வா.சா.ஆ.6 ஆவணத்தில் உள்ள 1,2 பிரதிவாதிகளின் கையொப்பத்தை பார்த்து நானும், வாதியும் வா.சா.ஆ.1 ஆவணத்தை தயார் செய்துள்ளோம் என்றால் தவறு. வாதி, பிரகாஷ், நான் ஆகியோர் கூட்டாக சேர்ந்து பிரதிவாதிகளிடம் துர்லாபம் அடைய வா.சா.ஆ.1 ஆவணம் தயார்

செய்யப்பட்டுள்ளது என்று தவறு. வாதி என்னுடைய சகோதரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.10.10 17:28:45 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.